# மேலூர் நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2022–2023

<u>மேலூர் நகராட்சி</u>
<u>(மதுரை மாவட்டம் )</u>

<u>நிர்வாக அறிக்கை</u>

நகராட்சியின் பெயர் : மேலூர் நகராட்சி

<u>நிலை</u> : மேலூர் 3.12.1888ம் நாளைய போர்ட்செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டின் 86வது அறிவிப்பின்படி ஊராட்சியாக 1888ம்ஆண்டுமுதல் அமைக்கப்பட்டது. பிறகு படிப்படியாக பேரூராட்சி நிலையில் உயர்த்தப்பட்டது. பின் பேரூராட்சிஅமைப்பிலிருந்து 31.12.77 ஆம் நாளைய தமிழ்நாடு அரசுஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 2098ம் எண்ணிட்ட ஆணையின்படி மூன்றாம்நிலை நகராட்சியாக1.1.78 முதல் உயர்த்தப்பட்டது. அரசாணை (நிலை ) எண்.85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (ந.நி.5) நாள்22.5.98ன்படி மேலூர் நகராட்சி மூன்றாம்நிலையிலிருந்து இரண்டாம்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது.

பரப்பளவு : 15.02 சதுர கிலோ மீட்டர்

மக்கள் தொகை : 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 40017 ஆகும். இவர்களில் ஆண்கள் 20405 ம் பெண்கள் 19612ம்ஆகும். விவரம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

வருவாய்கிராமம் : மேலூர் மற்றும் கருத்தப்புளியம்பட்டி ஆகிய கிராமங்கள் இந்நகராட்சியில் உள்ளடங்கியவை.

எல்லைகள் : வடக்கு:

மேலூர் கிராமம் புதுச்சுக்காம்பட்டி ஊராட்சியைஎல்லையாக கொண்டது. சர்வே எண்.1 முதல் கிழக்காக 263முடிய உள்ளது.

கிழக்கு

மேலூர் கிராமம் சர்வே எண்.263ல் ஆரம்பித்து தெற்குநோக்கி கருத்தப்புளியம்பட்டி கிராமம் சர்வேஎண்.235ல் முடிகிறது. நாவினிப்பட்டி மற்றும் ஆட்டுக்குளம்ஊராட்சிகளை கிழக்கு எல்லையாகக் கொண்டது.

தெற்கு

கருத்தப்புளியம்பட்டி சர்வே எண்.235ல் ஆரம்பித்துமேற்கு நோக்கி கருத்தப்புளியம்பட்டி சர்வே எண்.286ல்முடிகிறது. கொட்டகுடி மற்றும் பதினெட்டாங்குடி கிராமம் தெற்கு எல்லையாகக் கொண்டது.

மேற்கு

கருத்தப்புளியம்பட்டி சர்வேஎண்.86ல் ஆரம்பித்துவடக்கு நோக்கி மேலூர் கிராம சர்வே எண்.1ல் முடிகிறது. சூரக்குண்டு மற்றும் தெற்குத்தெரு கிராமங்களை மேற்கு எல்லையாகக் கொண்டது.

<u>நகர்விரிவு படுத்தும் திட்டம்</u> :இந்நகராட்சியில் எல்லையை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

## நகர்மன்றம்
## நகர்மன்றத் தேர்தல் 2022

*2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மேலூர் நகராட்சிப் பகுதியில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மறுவரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/தே.பொ.1 நாள்.19.10.2017 ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21337/2021/தேர்தல் நாள்.16.10.2021ன்படியும், சென்னை,தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், செயலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.தே.பொ.1/6669/2021 நாள்,19.10.2021ன்படியும் , இந்நகராட்சி 27 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டது. இதில் வார்டு எண்கள்– 3,5,6,10, 13,15,16,18, 20,22,24, மற்றும் 26 ஆகிய வார்டுகள் பெண்களுக்கும், வார்டு எண்.4 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் வார்டு எண்.11, 21 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்ட விபரப்படி நகர்மன்றத்தலைவர், நகர்மன்றத்துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.*

| வார்டு எண். | உறுப்பினர் பெயர் |
|---|---|
| வார்டு 8 | திரு முகமது யாசின் உ<br>நகர்மன்ற தலைவர் |
| வார்டு 14 | திரு இளஞ்செழியன் செள<br>நகர்மன்ற துணைத்தலைவர் |
| வார்டு 1 | திரு பாண்டி அ |
| வார்டு 2 | திரு ஆனந்த் த |
| வார்டு 3 | திருமதி.செல்வி மகாதேவன் |
| வார்டு 4 | திரு ரமேஷ் பா |
| வார்டு 5 | திருமதி அயிசாகனி சுபேர் |
| வார்டு 6 | திருமதி நதியா மீனாட்சி சுந்தரம் |
| வார்டு 7 | திரு கமால்மைதீன் நா |
| வார்டு 9 | திரு .எஸ்.டி.அருண்சுந்தரபிரபு |
| வார்டு 10 | திருமதி மல்லிகா தெ |
| வார்டு 11 | திருமதி சத்தியா ம |
| வார்டு 12 | திரு அறிவழகன் த |
| வார்டு 13 | திருமதி பிரேமா ப |
| வார்டு 15 | திருமதி ரிம்யா செந்தில் |
| வார்டு 16 | திருமதி சர்மிளா பேகம் அ |
| வார்டு 17 | திரு செல்வராஜ் பெ |
| வார்டு 18 | திருமதி சைபுநிஷா அலாவுதீன் |
| வார்டு 19 | திரு ரிஷி ரா |
| வார்டு 20 | திருமதி ரோஜன் முகமதுரஹ்மத்துல்லா |
| வார்டு 21 | திருமதி நல்லம்மாள் வி |
| வார்டு 22 | திருமதி ஷாஜகான்பீவி கஜினிமுகமது |
| வார்டு 23 | திரு திவாகர் த |
| வார்டு 24 | திருமதி ஜெயபூரீ மகேந்திரன் |
| வார்டு 25 | திரு மனோகரன் மு |
| வார்டு 26 | திருமதி கலைச்செல்வி செந்தில்குமார் |
| வார்டு 27 | திருமதி வசந்தா ராஜா |

# குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| **வரி விதிப்பு மேல்முறையீட்டு குழு (4 உறுப்பினர்கள்)** | **1)**திரு.ரா.ரிஷி, **19**வது நகர்மன்ற உறுப்பினர்<br>த/பெ ராமசந்திரன், |
| | **2)**திருமதி.ரிம்யாசெந்தில், **15**வது நகர்மன்ற உறுப்பினர்<br>க/பெ செந்தில்குமார், |
| | **3)**திரு.பா.ரமேஷ், **4**வது நகர்மன்ற உறுப்பினர்<br>த/பெ பாக்கியம் |
| | **4)** திரு.த.அறிவழகன், **12**வது நகர்மன்ற உறுப்பினர்<br>த/பெ தனராஜ், |
| **பணி நியமனக்குழு (ஒரு உறுப்பினர்)** | **1)**திரு.பெ.செல்வராஜ், **17**வது நகர்மன்ற உறுப்பினர்<br>த/பெ பெருமாள், |
| **ஒப்பந்தக் குழு (ஒரு உறுப்பினர்)** | **1)**திருமதி.தெ.மல்லிகா, **10**வது நகர்மன்ற உறுப்பினர்<br>க/பெ தெய்வேந்திரன், |

பொது: **இந்நகராட்சிக்கான பணியாளர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.10ன்படி கீழ்க்காணும் பணியாளர்கள் 23.01.2023 தேதி முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் திரு.சொ.ஆறுமுகம் ஆணையாளராக பணிபுரிந்து வருகிறார்.**

| | |
|---|---|
| *1.*மேலாளர் | *1* |
| **2.** உதவியாளர் | *1* |
| **3.**கணக்கர் | 1 |
| **4.**இளநிலை உதவியாளர் | **5** |
| **5.**தட்டச்சர் | *1* |
| **6.**வருவாய் ஆய்வர் | *1* |
| **7.**வருவாய்உதவியாளர் | *3* |
| *8.*பதிவறைஎழுத்தர் | *1* |
| **9.அலுவலக உதவியாளர்** | **3** |
| | ---- |
| | *17* |
| | ---- |

பணியாளர்களுக்கு அறிக்கையாண்டில் மொத்தம் பொதுநிதி *48890707/--* குடிநீர் ரூ.*2741619/--*ஊதியமாக வழங்கப் பட்டுள்ளது.

எழுது பொருள் :அறிக்கைஆண்டில் கூட்டுறவு அச்சகங்களில் இருந்து படிவங்களும் பதிவேடுகளும் வாங்கிய வகையில் ரூ.*830117/--*செலவாகி உள்ளது. சென்ற ஆண்டு ரூ.*612001/--* செலவாகி உள்ளது.

<u>பொறியியல் பிரிவு</u> **இந்நகராட்சிக்கான பணியாளர்கள் நகராட்சி நிர்வாகம் ற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.10ன்படி கீழ்க்காணும் பணியாளர்கள் 23.01.2023 தேதி முதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

| | | |
|---|---|---|
| *1)* | உதவி பொறியாளர் அல்லது இளநிலை பொறியாளர் நிலை-II | -1 |
| *2)* | குடிநீர் பணிமேற்பார்வையாளர் | -1 |
| *3)* | படவரைவாளர் நிலை III | -1 |
| *4)* | பணி ஆய்வாளர் | -2 |
| *5)* | மின்பணியாளர் நிலை II | -1 |
| *6)* | குழாய் பொருத்துநர் | -1 |
| | | ----- |
| | மொத்தம் | 7 |
| | | ----- |

<u>**நகரமைப்பு பிரிவு**</u> நகரமைப்பு ஆய்வர் **--1**

விளக்குகள்:

இந்நகராட்சியில் கிழ்க்கண்ட விவரப்படி மொத்தம் 1706 விளக்குகள் அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**தெருவிளக்குகள் விபரம்**

| வ.எண். | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 36 Watt 4 Tube Light | 356 |
| 2 | Energy Saving Light T5 Lamp (1X24 watts) | 959 |
| 3 | Energy Saving Light T5 Lamp (4X24 watts) | 50 |
| 4 | Energy Saving Light T5 Lamp (1X36 watts) | 61 |
| 5 | Energy Saving Light T5 Lamp (2X36 watts) | 60 |
| 6 | 150w SV Lamp | 27 |
| 7 | 250 Watts SV Lamp | 72 |
| 8 | 250w Mercury Vapour Lamp | 57 |
| 9 | 400 Watts Metal Halide Lamp | 64 |
| | **Total** | **1706** |

இந்த அறிக்கை ஆண்டில் அரசு நிதி உதவியுடன் போடப்பட்டுள்ள விவரம் சம்பந்தப்பட்ட மானியத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது,

தெருவிளக்கு பராமரிப்பு பணி தனியார் நிறுவனம் மூலம் ஆண்டு பராமரிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது.

அறிக்கை ஆண்டில் மின்கட்டணம் செலுத்தியவகையில் ஏற்பட்ட செலவு ரூ 79.64 இலட்சம்,
மின்சாதனங்கள் பராமரிப்புக்கு வாங்கியவகையில் ஏற்பட்ட செலவு ரூ.6.20,,,,,,,,,,,

சாலைகள்

இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள மொத்த சாலைகளின் நீளம் 74.348 கி.மீட்டர் ஆகும். அதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

**சாலைகளின் விபரம்**

| வ. எண். | சாலையின் விபரம் | நீளம் கி.மீட்டரில் |
|---|---|---|
| 1. | தார்சாலை | **36.797** |
| 2. | பிளேவர் பிளாக் சாலை | **14.788** |
| 3. | சிமெண்ட் சாலை | **5.231** |
| 4. | மண்சாலை | **17.532** |
| | மொத்தம் | **74.348** |

தவிர இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள பெருவழித்துறை பராமரிப்பில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 8.336 கி.மீ. ஆகும். அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1.மதுரை–திருச்சி பிரதான சாலை | 3.200 கி.மீ. |
| 2.திருவாதவூர் –திருப்புவனம் சாலை | 1.984 ,, |
| 3.சிவகங்கை சாலை | 1.632 ,, |
| 4.அழகர்கோவில் ரோடு | 1.520 ,, |
| | ––––– |
| மொத்த நீளம் | 8.336 ,, |
| | ––––– |

<u>வாடகை வண்டி நிலையம்</u>

இந்நகராட்சியில் வாடகைக்கார் நிலையம் ஏதும் நிர்வகிக்கப்படவில்லை.

<u>தங்கும் விடுதி</u>

இந்நகராட்சியில் தங்கும்விடுதி ஏதும் பராமரிக்கப்படவில்லை. பொதுப்பணித் துறையினரால் தங்கும் விடுதி ஒன்று இந்நகராட்சி எல்கைக்குள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்</u>

இந்நகராட்சியால் சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள் போன்றவைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை

<u>கல்விப்பணி</u>

இந்நகராட்சியில் ஒரு உயர்நிலைப்பள்ளியும் இரு ஆரம்பப்பள்ளியும் பராமரிக்கப் பட்டு வந்தது. மேற்காணும் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள்ஆகியோர்களை அரசுப்பணியாளர்களாக 1.4.99 தேதி முதல் எடுத்துக் கொள்ளப்பட்டதால் கல்வித் துறையினரால் கல்விப்பணிகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

<u>பள்ளிக்குழந்தைகள் சத்துணவு</u>

மூன்று நகராட்சிப்பள்ளிகளிலும் புரட்சித்தலைவர் எம்,ஜி,ஆர். சத்துணவுத் திட்டம் 15.9.82ம் தேதி முதல் அமலாக்கப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் நாள் 1க்கு சராசரியாக 765 மாணவ, மாணவியர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அறிக்கையாண்டில் மொத்தச் செலவு ரூ.148040/--க்கும் அரசு மான்யம் பெறப்பட்டுள்ளது. ஆணையர் மாதம் ஒரு முறை மேற்படிமையங்களை நேரடியாக ஆய்வு செய்துள்ளார்.

<u>குழந்தைகள் (2 ப்ளஸ் 4 ) சத்துணவு</u>

2 வயதுமுதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கான சத்துணவு திட்டத்தின் கீழ் இயங்கி வந்த 9 மையங்கள் 1.9.02 முதல் மதுரை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துணவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு திட்டம் எண்.1 அலுவலரின் பொறுப்பில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>கல்வி நிதி வரவு</u>

19.5.92ம் தேதிய எம்.எஸ்.எண்.492 கல்வி இலாகா அரசாணையில் ஆணையிட்டபடி 1.4.92ம் தேதி முதல் இந்நகராட்சியில் இருக்கும் கட்டிடங்கட்கு வருட வாடகை மதிப்பில் வருடத்திற்கு 2.5சதவீதம் கல்வி வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு இந்த ஆண்டு கல்வி வரியாக ரூ.39.00 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

<u>உயர்நிலைப்பள்ளி</u>

இந்நகராட்சியில் ஒரு உய ர்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது.

ஆனால் நகராட்சி எல்கைக்குள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்றும் ஆக இரு மேல்நிலைப்பள்ளிகள் இயங்கி வருகிறது.

நூல்நிலையங்கள்

நகராட்சியால் நூலகங்கள் மற்றும் படிப்பகங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. ஆனால் மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கீழ் ஒரு நூலகம் இயங்கி வருகிறது. 2022–23 க்கு மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழுவிற்கு நூலக வரி ரூ.13,34,566/–செலுத்தப்பட்டுள்ளது.

பொதுசுகாதாரப்பிரிவு

நகரில் சுகாதாரத்தைப்பேணிக்காக்க பொதுசுகாதார பிரிவு இயங்கி வருகிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்.10 நாள்.23.01.2023ன்படி கீழ்க்கண்டவாறு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1.துப்புரவு ஆய்வர் | 1 |
| 2.துப்புரவுபணி மேற்பார்வையாளர்கள் | 4 |
| 3.களப்பணியாளர் | 1 |
| | 5 |

2022–2023 அறிக்கை ஆண்டில் திரு. எஸ்.எம்.மணிகண்டன் துப்புரவு அலுவலராகவும், மற்றும் வே.சுப்பையா துப்புரவு ஆய்வாளராகவும், பணியாற்றி வந்தனர்.

இந்தநிதியாண்டில் நகராட்சி ஆணையரே சுகாதாரப்பிரிவு பணிகளையும் துப்புரவு அலுவலர் மூலம் கவனித்து வந்தார்.

பிறப்பு,இறப்பு

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி எல்கைக்குள் 404 குழந்தைகள் பிறந்துள்ளது. கடந்த ஆண்டில் 1111 குழந்தைகள் பிறந்துள்ளது. இந்நகராட்சியில் தாய்சேய் நல விடுதி ஏதும் பராமரிக்கப்படவில்லை. அறிக்கையாண்டில் பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 27 சென்ற ஆண்டு 27

அறிக்கை ஆண்டில் இறந்தவர் 95 கடந்த ஆண்டில் இறந்தவர் 295 ஆகும். அறிக்கையாண்டில் இறப்பு விகிதம் 1000க்கு4.30சென்ற ஆண்டு 6.67 ஆகும்.

இறப்பு விவரம்

| | |
|---|---|
| 1.காய்ச்சல் | – |
| 2.வயிற்றுக்கடுப்பு | – |
| 3.சுவாசசம்பந்தமான வியாதி | 56 |
| 4.அம்மை | – |
| 5.பிளேக் | – |
| 6.மலேரியா | – |
| 7.இன்புளுயன்சா | – |
| 8.மற்ற வகையில் | 153 |
| மொத்தம் | 209 |

சுகாதாரப்பணி

அறிக்கை ஆண்டில் 41 நிரந்தரம் மற்றும் 90 தனியார் மய சுகாதார பணியாளர்களைக் கொண்டு நகரில் சுகாதாரப்பணி நல்லமுறையில் செய்யப்படுகிறது. இப்பணிக்காக சுகாதார மேற்பார்வையாளர்கள் பணியில் உள்ளனர்., இவர்களின் பணிகள் ஒரு துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலரின் கண்காணிப்பில் இருந்துவந்தது.

<u>கலவை உரம்</u>

திடக்கவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேலூர் கருத்தபுளியம்பட்டி கிராமத்தில் 7.45 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு உரம் தயாரிப்புப் பணிக்கான உள் கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான நிதி திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளன. உள் கட்டமைப்பு பணிகள் முடிந்தடன் உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும். சந்தைபேட்டை யில் 4 டன் கொள்ளவு கொண்ட MCC செயல்பட்டு வருகிறது. உரம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது.

<u>சுகாதார தளவாட சாமான்கள்</u>

கீழ்க்காணும் வண்டிகள் மற்றும் தளவாட சாமான்களைக் கொண்டு நகரின் சுகாதாரப்பணிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 1.BOV | 15 |
| 2 LCV | 4 |
| 3.டிப்பர் டிராக்டர் | 2 |
| 4.டம்பர் பிளேசர் | 1 |
| 5. டிப்பர் லாரி | 1 |

இந்நகராட்சியில் வரிவிதிப்பு வீடுகளில் 3347 கடைகள் உள்ளது. 9227 வீடுகளில் கக்கூஸ் உள்ளது.

நகரில் 3 பொதுசிறுநீர்ப்பிறைகள் உள்ளது. பொதுமல அறைகள் 10 உள்ளது. இவைகளுக்கென தனியாக பராமரிப்பு செலவு விவரம் ஏதும் அறிக்கை ஆண்டில்இல்லை.

<u>8.நோய்தடுப்பு நடவடிக்கை</u>

அறிக்கை ஆண்டில் நகரில் கொள்ளை நோய் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. கொள்ளை நோய் ஏதும் பரவ விடாமல் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இது தவிர மாதந்தோறும் ஒவ்வொரு புதன்கிழமை நகராட்சி பேறுசார் குழந்தைகள் நல மையத்தில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு டி.பி.டி. போலியோ, தட்டம்மை, தடுப்பூசி கர்ப்பிணிப்பெண்களுக்கு ரணவாதி (டி.டி.) ஜன்னி தடுப்பூசியும் போடப்பட்டு வருகிறது.

<u>ஆர்.சி.எச்.பி. திட்டம்</u>

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை ( RCHP ) அரசாணை நிலை எண்.139 நாள் 31.3.99ல் உலக வங்கி நிதி உதவியுடன் பேறுசார் மற்றும் குடும்ப நலத்திட்டத்தினை செயல்படுத்திட அனுமதிக்கப்பட்டது. இத்திட்டச்செயல்பாட்டிற்காக சந்தைபேட்டை வாரச்சந்தைப்பகுதியில் உலகவங்கி நிதி உதவியால் ஆர்.சி.ஹெச்.பி.திட்டத்திற்கு மருத்துவமனை கட்டப்பட்டு அங்கு இம்மருத்துவமனை இயங்கி வருகிறது. நடப்பாண்டில் ஒரு செவிலியர், ஒரு கம்ப்யூட்டர் கம் கிளார்க் மற்றும் 3 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தினமும் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகள் மருத்துவம் பார்க்கப்பட்டு வருகின்றது. ஒரு மருத்துவர் மற்றும் 4 ஏ.என்.எம். களப்பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். நடப்பாண்டில் 24825 வெளிநோயாளிகளுக்கும் 411 உள் நோயாளிகளுக்கும் மருத்துவம் பார்க்கப்பட்டது. நடப்பாண்டில் 22 பிரசவம் பார்க்கப்பட்டது. பிரதி புதன்தோறும் இம்மையததில் குழந்தைகளுக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது. பள்ளி மாணவர்கள் நல வாழ்வு திட்டத்தின் கீழ் நகராட்சிப்பகுதியில் உள்ள அரசுபள்ளி மாணவர்களுக்கு மருத்துவம் பார்க்கப்படுகிறது.

<u>ஈ.குடும்ப நலத்திட்டம்</u>

அறிக்கைஆண்டில் நகராட்சிக்கு குடும்ப நலத்திட்டப்பணி குறித்து குறியீடு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை.

ஊ.வடிகால்திட்டம்

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.23.00 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்க விரிவான திட்ட அறிக்கை செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதனை நிர்வாக அனுமதி வேண்டி அரசுக்கு அனுப்பப்பட உள்ளது. ஆனால் கச்சா சாக்கடைகள் பராமரிக்கப்பட்டு கழிவுநீர் அன்றாடம் அகற்றப்படுகிறது.

புல் பண்ணை

நகராட்சிக்குச் சொந்தமான 1 ஏக்கர் நிலப்பரப்பில் புல்பண்ணை பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எ.பணியாளர் குடியிருப்பு பிற வசதிகள்

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்களுக்கென 19 வீடுகள் மின்வசதியுடன் வழங்கப் பட்டுள்ளது. மேலும் தற்போது ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் தூய்மைப்பணியாளர் குடியிருப்பு கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார்செய்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆண்,பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 2 ஜோடி பாலிஸ்டர் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் ஒரு ஜோடி காலணி வழங்கப்பட்டுள்ளது.

ஐ.அபாயகரமானதும், அருவருக்கத்தக்க தொழில் உரிமம்

நகராட்சி எல்கைக்குள் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் இத் தலைப்பின் கீழ் அபாயகரமானதும், அருவருக்கத்தக்க தொழில் உரிமம் மூலம் ரூ.131450/– உணவு கலப்பட தடைச்சட்டத்தின் மூலம் ரூ.131450/–வசூல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வருமானம் முறையே ரூ.109000/ ஆகும்.

விழாக்கள்

இந்நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட திருவிழாக்கள் ஏதும் இல்லை.

நெருப்பு, பாதுகாப்பு

இந்நகரில் அரசின் தீ அணைப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

பலதரப்பட்ட வருவாய் இனங்கள்

1.வாரச்சந்தை

இந்நகராட்சியில ஒரு வாரச்சந்தை நிர்வகிக்கப்பட்டு வருடா வருடம் கட்டணம் வசூலிக்க உரிமையை ஏலம் விடப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் ரூ.4020000/–க்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளது. தற்போது வாரச்சந்தை மேம்படுத்தும் பணிக்கு ரூ.5.00 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.தினசரி சந்தை

ஒரு நாளங்காடியும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்விஷயத்தில் கட்டணம் வசூல் செய்யும்உரிமை ஆண்டுதோறும் எலம் விடப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் ரூ.6429000/– ஏலம் விடப்பட்டது. தற்போது தினசரிசந்தை மேம்படுத்தும் பணி ரூ.7.87 கோடியில் பணி நடைபெற்று வருகிறது.

3.ஆடறுக்கும் சாலை

இந்நகராட்சியில் ஒரு ஆடறுக்கும் சாலை பராமரிக்கப்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவர் மேற்பார்வையில் ஆடுகள் பரிசோதனைக்குப்பின் உரிய சான்றுடன் ஆடுகளை அறுத்து முத்திரைவைக்கப்படுகிறது. ஆடறுக்கும் மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஏலத்தில் விடப்பட்டு வருகிறது. அறிக்கை ஆண்டில் ரூ165000/–க்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

வழக்குகள்

| | |
|---|---|
| அறிக்கை ஆண்டில் ஆரம்ப நிலுவை | 3 |
| தொடரப்பட்ட வழக்கு | – |
| முடிவுற்ற வழக்கு | – |
| நிலுவையில் உள்ள வழக்குகள் | 3 |

தண்ணீர் விநியோகம்

இந்நகராட்சியில் அனைத்து வார்டு பகுதியில் காவேரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் 3.61 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் தட்டுபாடு ஏற்படும் பட்சத்தில் உள்ளூர் நிதி ஆதாரங்களின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி விபரம்**

| வ. எண். | மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள இடம் | கொள்ளளவு இலட்சம் லிட்டரில் (LL) |
|---|---|---|
| 1. | அண்ணா காலணி | 7.00 |
| 2. | நகராட்சி அலுவலக வளாகம் | 3.00 |
| 3. | எஸ்.எம்.நகர் | 5.00 |
| 4. | காந்தி நகர் | 3.00 |
| 5. | மினி மேல்நிலை நீர்தேக்க தொட்டி (7 எண்ணிக்கை) 0.60LL | 4.20 |
| 6. | மினி மேல்நிலை நீர்தேக்க தொட்டி (12 எண்ணிக்கை) 0.30LL | 3.60 |
| | மினி மேல்நிலை நீர்தேக்க தொட்டி (1 எண்ணிக்கை) 0.80LL | 0.80 |
| | மொத்தம் | 26.60 |

**குடிநீர் விநியோக மின்மோட்டார்களின் விபரம்**

| வ. எண். | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 25 எச்.பி. | 1 |
| 2 | 17.5 எச்.பி. | 2 |
| 3 | 7.5 எச்.பி. | 4 |
| 4 | 5 எச்.பி. | 29 |
| 5 | 3 எச்.பி. | 2 |

நகரின் பல பாகங்களில் 101 ஆழ்துளைக்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. அவை மூலம் தினம் 5.50 லட்சம் லிட்டர் நீர் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ.5000 மற்றும் குடிநீர்அல்லாத பயன்பாட்டிற்கு வைப்புத்தொகை ரூ.10000 தீர்மானிக்கப்பட்டுள்ளது. குடிநீர் பயன்பாட்டிற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.120 மற்றும் பிற உபயோகத்திற்கு ரூ.200 வசூல் செய்யப்படுகிறது.

வடிகால்

இந்நகராட்சியில் அறிக்கை ஆண்டில் சாக்கடை திட்டம் எதுவும் செயல்படவில்லை. திறந்த சாக்கடைகள் கட்டி அதன்மூலம் கழிவுநீர் வெளியேற்றப்படுகின்றது.

<u>தண்ணீர் மற்றும் சாக்கடை கணக்கு</u>

இத்தலைப்பின் கீழ் அறிக்கை ஆண்டில் செலவு ரூ.21.33 லட்சம்

<u>பொதுசுகாதாரம் பாதுகாப்பு</u>

தொற்றுநோய் வராமலும் பரவாமலும் இருக்க நல்லமுறையில் பொதுசுகாதார நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட காரணத்தால் நகரில் தொற்றுநோய் ஏதும் அறிக்கையாண்டில் வரவில்லை. பொது மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் அறிக்கைஆண்டில் திருப்தியாக செய்யப்பட்டது.

துப்புரவு தொழிலாளரின் வாழ்க்கைத்தரம் நன்றாக உள்ளது. பொதுசுகாதார சிப்பந்திகட்கு ஏற்கனவே மின் சக்தியுடன் கட்டிக் கொடுக்கப்பட்ட 19குடியிருப்பு வீடுகள் உள்ளன. புதிய வீடுகள் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

<u>வண்டிப்பேட்டை</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான வண்டிப்பேட்டை எதுவும் செயல்படவில்லை. தனியார் நடத்தும் வண்டிப்பேட்டையும் இல்லை.

<u>பூங்காக்கள்</u>

இந்நகராட்சியில் 10 பூங்காக்கள் உள்ளன. வெங்கடேஷ்வரா நகர் **சத்யா நகர், விஷ்ணு நகர் பகுதிகளில் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் மூன்று பணிகள் நடைபெற்று வருகிறது.**

<u>அலுவலர் மற்றும் காவலர் குடியிருப்பு</u>

இந்நகராட்சியில் 3 பள்ளிக்கூடங்கள் உள்ளன. மேற்படி பள்ளியின் பணியாளர்கள் கல்வித்துறையால் பராமரிக்கப்படுகிறது

மேலும் கீழ்க்காணும் 3 சொத்துக்களையும் ஊராட்சிப் பொறுப்பில் இருந்து நகராட்சிப் பொறுப்பிற்கு மாற்றிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.டிஸ்டிரிக்போர்டு சத்திரம்
2.லோகல்பண்டு குடியிருப்பு வீடுகள்
3.டோல்கேட் கட்டிடம்

<u>கலை அரங்கு</u>

இந்நகராட்சியில் கலை அரங்கு ஏதும் பராமரிக்கப்படவில்லை.

<u>நகரமைப்பு</u>

5.11.62ம் தேதிய 3470 அரசாணையின்படி நகரமைப்பு திட்டம் இந்நகருக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி ஒரு நகரமைப்பு ஆய்வர் பணியாற்றி வருகிறார். அறிக்கை ஆண்டில் திரு. **பி.சரவணக்குமார்** நகரமைப்பு ஆய்வராக பணிபுரிந்துள்ளார்.

<u>நகரசர்வே அளவு</u>

மேலூர் நகரத்தை சர்வே செய்து 9(2) பிரிவின் கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. நகரளவு பணிமுடித்து அதற்கான வரைபடங்கள் பதிவேடுகள் முதலான ஆவணங்கள் ஏதும் சர்வே இலாக்காவினால் இன்னமும் நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவில்லை.

<u>ஆக்கிரமிப்புகள்</u>

மேலூர் நகரில் நில அளவை தொடர்பாக பணிகளையும் ஆக்கிரமிப்புக்களைக் கண்டறிந்து அகற்றும் பணிகளையும் மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவின் கீழ் பஞ்சாயத்து சர்வேயர், நகராட்சி நகரமைப்பு ஆய்வருடன் இணைந்து கூடுதல் பொறுப்பாக கவனித்து வருகிறார். இவருக்கு 1/3 ஊதிய பங்குத்தொகை நகராட்சியால் செலுத்தப்பட்டு வருகிறது.

<u>தற்காலிக ஆக்கிரமிப்புகள்</u>

இந்நகராட்சியில் தற்காலிக ஆக்கிரமிப்புக்கட்டணம் தலைப்பில் வரவு இல்லை.

<u>நகரமைப்பு திட்ட நிதி</u>

இத்தலைப்பின் கீழ் அறிக்கைஆண்டில் ஏதும் செய்யப்படவில்லை. நகரமைப்பு திட்டம் ஏதும் செய்யப்படவில்லை. நகர விஸ்தரிப்பு மேம்பாட்டுத்திட்டம் ஏதும் செயல்படவில்லை.

<u>வரி மற்றும் வரி அல்லாத இனங்கள் வசூல் பணி</u>

இந்நகராட்சியில் விதிக்கப்படும் முக்கிய வரி இனங்களில் கடந்த மூன்று ஆண்டு கேட்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 2020.2021 | 2021–2022 | 2022–2023 |
|---|---|---|---|
| 1.வீட்டுவரி | 130.95 | 141.41 | 232.18 |
| 2.தொழில்வரி | 28.60 | 29.89 | 31.85 |
| 3.தண்ணீர்கட்டணம் | 51.16 | 53.78 | 58.74 |

| வரி இனம் | மொத்தக்கேட்பில் | வசூலிக்கக்கூடியகேட்பில் |
|---|---|---|
| அறிக்கையாண்டில்வரிஇனத்தில் கேட்பு | | |
| சொத்துவரி | 232.18 | 203.28 |
| வசூல் | 211.77 | 196.19 |
| நிலுவை | 20.72 | 7.09 |
| நடப்பு சதவீதம் | 91.21 | 96.51 |

| வரி அல்லாதஇனம் | மொத்தக்கேட்பில் | வசூலிக்கக்கூடியகேட்பில் |
|---|---|---|
| வசூலிக்கக்கூடிய கேட்பு | | |
| தொழில்வரி | 31.85 | 26.65 |
| வசூல் | 31.16 | 26.56 |
| நிலுவை | 0.69 | 0.09 |
| வசூல் சதவீதம் | 97.84 | 99.67 |

| தண்ணீர்க்கட்டணம் | மொத்தக்கேட்பில் | வசூலிக்கக்கூடியகேட்பில் |
|---|---|---|
| கேட்பு | 58.74 | 58.62 |
| வசூல் | 33.91 | 33.87 |
| நிலுவை | 24.83 | 24.75 |
| வசூல் சதவிகிதம் | 57.72 | 57.78 |

நிதி நிலைமை வரவும், செலவும்

| வருடம் | வரவு | செலவு |
|---|---|---|
| 2021-22 | 109127269.10 | 121736880.52 |
| 2022-23 | 154322720.20 | 162321720.32 |

அரசு இதர கடன்கள்

| | Principal | Interest | Total |
|---|---|---|---|
| **Loan From D T C P** | 1164253 | 2287319 | 3451572 |
| **SRP-0010** | 8090000 | 0 | 8090000 |

முதலீடுகள்

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட விவரப்படி முதலீடு செய்யப் பட்டுள்ளது.

| Sl. No. | Receipt No. & Date of Investment | OB | Investment Amount | Inerest Amount | Withdraw Investment Matured Value | Closed Balance (2022-2023) |
|---|---|---|---|---|---|---|
| 1 | City Union Bank, F.D.No.50070718007 Date:27.03.2023 | 8500000 | 8500000 | 345000 | 8845000 | 8845000 |

<u>தணிக்கை அறிக்கை</u>

இந்நகராட்சியில் 2022–23 ஆம் வருடம் முடிய கணக்கு தணிக்கைமுடியப் பெற்றுள்ளது. 31.10.2022 முடிய 143 தணிக்கைத்தடைகள் நிலுவையாக உள்ளது. நிலுவையாக உள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்ய தணிக்கை கூட்டமர்வு நடத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

<u>பொது</u>

இந்நகராட்சியின் நிர்வாகம் நகர்மன்றத்தலைவர், துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் இந்நகராட்சியின் எல்லாப்பிரிவு அலுவலகப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மிகவும் சுமுகமாகவும், சிறப்பாகவும் திருப்திகரமாகவும் நடைபெற்று வருகிறது. நிர்வாக நடப்பு ஆண்டில் சீரும் சிறப்புமான முறையில் நடைபெற்றதற்கு ஒத்துழைப்புக் கொடுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்திற்கு நிர்வாகத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஆணையாளர் ,
மேலூர் நகராட்சி